# 2

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# இது சாத்தியமா?

இந்த நாட்களில் உள்ள போதர்களில் பலர், மக்களை முதலில் கிறிஸ்தவர்களாகும்படியும், பிறகு "தங்கள் தேர்வுப்படியான சபை யொன்றில் சேர்ந்து கொள்ளும்படியும்" மக்களுக்குப் போதிக்கின்றார்கள். இவ்விதமாக அவர்கள், நாமகரணக் கூட்டத்தின் இணைவு இன்றி, விலகியே மனிதர்கள் கிறிஸ்தவர்கள் ஆகின்றனர் - அதாவது, நாமகரணக் கூட்டக் கொள்கை எதுவுமின்றி ஒருவர் கிறிஸ்தவராகி, கிறிஸ்தவராக மட்டுமே இருத்தல் என்பது சாத்தியமே - என்பதை இவ்விதமாய் அந்தப் போதகர்கள் ஒப்புக் கொள்கின்றார்கள். ஆகையால், இக்காலத்தின் புகழ் மிக்க போதனையின்படி தேவனை ஆராதிக்கும்படி விரும்புகின்ற ஒருவர் தம் பகுதியாகச் செய்ய வேண்டிய முதல்செயல் கிறிஸ்தவராகுதல் ஆகும் என்று அவர்கள் வாதிடவோ அல்லது நிரூபிக்கவோ தேவையில்லை.

மற்றும், இக்காலத்தின் புகழ்மிக்க போதனையின்படி, மக்கள் ஒரு நாமகரணக் கூட்டத்தினுள் நுழையும் முன்பாகவே முதலில் கிறிஸ்தவர் களாவது மட்டுமின்றி, இயேசுவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டு, தேவ ஆட்டுக்குட்டியின் மதிப்பார்ந்த இரத்தம் என்ற விலையினால் வாங்கப்பட்டு, மீட்கப்பட்டு, கிரயம் கொள்ளப்படுகின்றார்கள் என்பதை நானும் நிரூபிக்கத் தேவையில்லை. இவை யாவையும் ஒப்புக் கொள்ளப் பட்ட உண்மைகளாய் உள்ளன. இந்த நாட்டில் உள்ள எந்த ஒரு நாமகரணக்கூட்டமும் ஒரு மனிதர் கிறிஸ்தவராகி, இரட்சிக்கப் பட்டுள்ளதை நம்பும் வரையிலும் அவரைத் தனது ஐக்கியத்தில் சேர்த்துக் கொள்வதில்லை. இந்த வேளையில் பல்வேறு மதக் குழுக்களும் தனது முக்கியத்துவத்தை வலியுறுத்தி கவனம் நிறைந்த ஊழியத்தை உரிமை கோருகின்றன. இந்த போதகர்கள் மக்களிடம் கிறிஸ்தவர்களாவது எவ்விதம் என்று கூறுகின்றார்களா இல்லையா என்று தற்போதைய கேள்வியை விட்டு விட்டாலும், மக்கள் நாமகரணக் கூட்டத்தார் ஆகுமுன்பு அவர்கள் இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாகி, கிறிஸ்தவர்களாக வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்படுகின்றது. ஒப்புக் கொள்ளப்பட்ட இந்த உண்மையானது இந்தக் கலந்துரையாடலில் தகுதி வாய்ந்ததாய் உள்ளது; இது குறைந்தபட்சம் ஒரு தொடக்கக் கருத்து நிலையை அளிக்கின்றது.

ஒருவர் கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்பட்டு, கிறிஸ்துவிடம் வந்து, அவரது இரத்தத்திடமும் வந்து, இரட்சிக்கப்பட்டு, தம்மீது நாமகரணக் கூட்டத்தின் கரையெதுவுமின்றியே தனது பெயரை ஆட்டுக்குட்டி

*யானவரின் ஜீவ புத்தகத்தில் எழுதப்படும்படியிருக்க முடியும் என்பதை ஒப்புக் கொள்வது அதிகமானதை ஒப்புக் கொள்வதாகின்றது. மேலும், இதுவே, தேவனைப் பிரியப்படுத்த விரும்புகின்ற ஒருவர், இத்தனை நாமகரணக் கூட்டங்கள் இருப்பது ஏன் என்று திகைப்படையச் செய்யப் போதுமானதாக உள்ளது. எனவே, இரட்சிக்கப்பட்ட இந்த மனிதர், தேவனுடைய இந்தப் பிள்ளை, இந்தக் கிறிஸ்தவர், சபையைச் சார்ந்திருக்க, சபை இணைவைக் கொண்டிருக்க, சபைக்குத் தவறாமல் செல்பவராயிருக்க, ஒரு நாமகரணக் கூட்டத்தில் இணைய வேண்டுமா என்ற கேள்வியானது கலந்துரையாடப்பட வேண்டியதாக உள்ளது.*

*பெந்தெகொஸ்தே நாளன்று சீஷர்களின் எண்ணிக்கையுடன் சேர்க்கப் பட்ட மூவாயிரம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்ட மக்களாக, கிறிஸ்தவர் களாக இருந்தார்கள் என்பதில் சந்தேகப்பட முடியாது, ஏனெனில், "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" (அப். 2:47ஆ) என்று கூறப்படுகின்றது. அல்லது, இந்த சீஷர்கள் எல்லாரும் "ஒருமித்திருந்து," மற்றும் "ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து ... தேவனைத் துதித்தார்கள்" (அப். 2:44, 46, 47) என்பதையும் மறுக்க முடியாது. அது போலவே, இந்த மக்கள் தேவாலயத்தில் ஒன்றுகூடி, சபையாய் "தேவனைத் துதித்து," ஒரு சபையாராகி, "சபை என்ற திறனளவையில்" ஊழியம் செய்து, மற்றும் இந்த சீஷர்கள் யாவரும் அந்த சபையைச் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள் என்பதும் மறுக்கப்படாது. நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக நாம் இந்த மக்களின் வரலாற்றைத் தொடர்ந்து அறிந்துகொள்ள, அவர்களின் பிரசங்கியார்களில் இருவரான பேதுருவும் யோவானும் அவருடைய நாமத்தில் பிரசங்கித்தமைக்காகச் சிறையிடப்பட்டதைக் காணலாம்; ஆனால் ஆலோசனைக்குப் பிறகு அந்தப் பிரசங்கியார்கள் "தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில்" (அப். 4:23) திரும்பச் செல்ல அனுமதிக்கப் பட்டார்கள், அவர்களிடத்தில் தாங்கள் கைதிகள் என்ற வகையில் தங்களின் அனுபவத்தை அறிக்கை செய்தார்கள். பிறகு இந்த மக்கள் கூட்டம், "அவர்கள் அதைக்கேட்டு, ஒருமனப்பட்டுத் தேவனை நோக்கிச் சத்தமிட்டு" ஜெபித்தார்கள் (அப். 4:24); "அவர்கள் ஜெபம் பண்ணினபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் ... தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்" (அப். 4:31). ஆகையால், இந்த மக்கள் - இரட்சிக்கப்பட்ட இந்த மக்கள் - ஒன்றுகூடியிருந்தனர் மற்றும் ஒன்று கூடிய திறனளவில் இவர்கள் தேவனை ஆராதித்துக் கொண்டு, அவரைத் துதித்துக் கொண்டு, அவரிடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட கூட்டங்களை "சபை கூடுதல்கள்" என்று அழைப்பதில் நாம் தவறு செய்யக் கூடுமா? இரட்சிக்கப்பட்ட இம்மக்கள், "ஒன்றுகூடி" "சபையாக" இவ்விதம் கூடி ஆராதித்தனர் என்றும் அவர்கள் ஒரு "சபையின் திறன் அளவிலேயே" உண்மையில் கூடி ஆராதித்தனர் என்றும் கூறுவது தவறாய் இருக்க முடியுமா? அவ்வாறில்லையெனில் நாம் வேகமாய் போய் அதிகமாய் முடிவு செய்து விடுவோம், ஆகவே பதிவேடுகளின் பக்கமாய்க் கவனத்தைத் திருப்புவோம். இவர்களைச் "சபையார்" என்று பரிசுத்த ஆவியானவர்*

*அழைத்தால், நாம் திருப்தியடைவோம்.*

> *அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப் படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, ... நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம் ... (அப். 6:1-5).*

*அவர்கள் மனிதர்களைத் தெரிந்தெடுத்தனர், மற்றும் அப்போஸ்தலர்கள் அவர்களை "இந்த வேலைக்காக" நியமித்தனர். இவ்விதமாக நாம், இந்த மக்கள் எருசலேமில் மீண்டும் கூடினார்கள் என்று காண்கின்றோம். ஒன்று கூடும் இந்தத் திறனளவில், அவர்கள் ஊழியத்தில் ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்வதற்கு ஊழியர்களைத் தேர்ந்தெடுத்தனர். (இதை நான் "சபை ஊழியம்" என்று கூறலாமா?) "தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்" (அப். 6:7).*

*எருசலேமில் சீஷர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருந்தது. ஜெபித்துக் கொண்டு, துதித்துக் கொண்டு, போதித்துக் கொண்டு, பாவிகளை இரட்சித்துக் கொண்டு மார்க்க ஊழியத்தில் சுறுசுறுப்பாய் ஈடுபட்டிருந்த இந்த கூட்டத்தார் யார்? இதை சபை என்று அழைக்க நாம் தயாராக உள்ளோமா? கர்த்தருடைய சீஷர்களான இரட்சிக்கப்பட்ட மக்கள் கர்த்தருடைய சீஷர்கள் என்ற வகையில் மாத்திரம் "சபைத் திறனளவில்" ஊழியம் செய்து ஆராதித்ததை மற்றும் இரட்சிக்கப்பட்ட மக்கள் தினமும் அவர்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டதை நாம் உண்மையாகக் கண்டுள்ளோம் என்று கூறுவோமா? இந்த மக்களை நாம் பாதுகாப்புள்ள எல்லா வகையிலும் சபை என்று கூற முடிந்திருக்கையில், பரிசுத்த ஆவியானவர் இவ்விதமாய் அவர்களை அழைத்திருப்பதை நாம் கண்டறியும் போது இன்னும் அதிக பாதுகாப்பாக உணர முடியும்: "அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று" (அப். 8:1ஆ).*

*ஜெபித்தல், துதித்தல், பிரசங்கித்தல் ஆகியவற்றிற்கு ஒன்றுகூடிய மற்றும் ஏழைகளைக் கவனிக்க மனிதர்களை நியமித்த இந்த மக்களையே, உண்மையில் இதே மக்களையே, பரிசுத்த ஆவியானவர் தாமே "எருசலேமிலுள்ள சபை" (அப். 8:1; 11:22) என்று அழைத்தார். நிச்சயமாகவே இது போதுமானதாக உள்ளது. எருசலேமில் உள்ள இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் ஒரு சபையின் உறுப்பினராக இருந்தார், இருந்தாலும், எருசலேமில் இருந்த சபையானது நாமகரணக் கூட்டம் என்று சொல்லப்பட முடியாததாக இருந்தது. எருசலேமில் இருந்த இந்த சபையானது நகரத்திலுள்ள ஒவ்வொரு இரட்சிக்கப்பட்டவரும் உட்பட, தேவனுடைய சபையாய் இருந்தது என்பதை ஒவ்வொரு நாமகரணக் கூட்டத்தாரும்*

ஒப்புக் கொள்வார்களே. ஆகையால், இந்த சீஷர்கள் - இந்தக் கிறிஸ்தவர்கள், இந்த இரட்சிக்கப்பட்ட மக்கள் - ஒருக்காலும் ஒரு நாமகரணக் கூட்டம் பற்றி கேள்விப்படாதவர்களாக, கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் சீஷர்களாக மட்டுமே வாழ்ந்து இறந்தார்கள்.

உண்மையிலேயே, நாமகரணமற்ற கிறிஸ்தவமானது தூய்மையும் எளிமையுமானதாக, தூய கிறிஸ்தவம் என்று இந்த உலகத்தார் யாவரும் ஒப்புக்கொள்வதாக உள்ளது என்று நாம் கண்டறிந்துள்ளோம். அத்துடன் நாம், தேவனுடைய மக்கள் ஒரே இருதயமும் ஒரே ஆவியும் கொண்டவர்களாய் இருந்தனர் என்றும் நாம் கண்டறிந்துள்ளோம்; அவர்களுக்கிடையில் பிரிவினை இல்லாதிருந்தது, ஆனால் அவர்கள் ஏகமனதுடன் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருந்தனர் (1 கொரி. 1:10). இதுவே, விசுவாசிகள் யாவரும் ஒன்றாய் இருக்க வேண்டும் என்ற நமது இரட்சகரின் பரிசுத்தமான ஜெபமாய் இருந்தது (யோவா. 17:20, 21). இவ்விடத்தில் உண்மையிலேயே இதற்குப் பதில் அளிக்கப்பட்டது. நாமகரணக் கூட்டங்கள் இருந்தால் பிரிவினைகள் எப்படி ஒழியும் - மற்றும் நமது எஜமானரின் ஜெபம் எவ்விதம் பதில் அளிக்கப்படும்?